உ

பங்குனி உத்திரம்

குரு வீடான மீனராசியில் (பங்குனி மாதத்தில்) சூரியனும், கன்யா ராசியில் சந்திரனும் நேராக பார்த்துக் கொள்ளும் திருநாளே பங்குனி உத்திரம் பௌர்ணமி திருநாள். உத்திரம் என்று அழைக்கப்படும் உத்திரபல்குனி நட்சத்திரத்துடன் முழுநிலவு ஒருசேர இருக்கும் இந்த மாதத்தை பால்குன என்று அழைக்கப்பட்டு மறுவி பங்குனி என்று தற்பொழுது அழைக்கப்படுகிறது. "சாந்திரமாத" பங்குனி மாதத்தை "பால்குன மாஸம்" என்றும் அழைப்பார்கள். பிரஹஸ்பதி இடத்தில் சூரியன் இருக்க சந்திரன் பார்க்க, உத்திராயணத்தில், உத்திரம் நட்சத்திரத்தில் திருமணம் என்பது மிகவும் தெய்வீகமானது.

திருமுருகன் வள்ளி தேவானை கல்யாணம், சிவ பார்வதி கல்யாணம், சீதா ராம கல்யாணம் இப்படி தெய்வத்திருமணங்கள் நடந்த சுபநாள் இது. மேலும் ஸ்ரீ ஐயப்பன் ஜன்ம தினமும் இன்றுதான் இப்படி சைவ வைஷ்ண ஒற்றுமையை வளர்க்கும் திருநாள். எந்த பேதமும் இன்றி இந்து மதத்தின் அனைத்து பிரிவுகளும் ஒருசேர கொண்டாடும் ஒற்றமை திருநாள் தான் பங்குனி உத்திரம் என்றால் மிகையாகாது.

தமிழகத்தை பொருத்தமட்டில் தமிழின் கடவுள் திருமுருகனின் வள்ளி தெய்வானை திருமணம் ஆறுபடைவீடு மற்றும் திருமுருகனின் தலங்கள் அனைத்திலும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படும் நாள் இதுவே. பக்தர்கள் பாதயாத்திரை செய்து, பால் காவடி எடுத்து நேர்த்திக்கடனை செலுத்தி இறைவனை வணங்குவார்கள்.

சிவன் கோவில்களில் சிவ பார்வதி திருமணம், வைணவ கோவில்களில் சீதாராம திருக்கல்யாண வைபோகமும் சிறப்பாக கடைபிடிக்கப்படுகிறது. தென் கோடி தமிழ் நாட்டில் ஐயப்பன் ஜன்ம தின வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது

இன்றைய தினம் கோவில்களுக்கு சென்று வழிபடுவதால் இல்லறத்தில் தம்பதி ஒற்றுமை ஏற்படும், திருமண தடை நீங்கி விரைந்து திருமணம் நடைபெறும்.

செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் பரிகாரமாக ஆதரவற்றோர்களுக்கு அன்னதானம் செய்யலாம். சேவல் வாங்கி முருகனின் திருத்தலங்களில் தாரை வார்க்கலாம்.

© காப்புரிமை 2010 - 27.3.2010

பாலு சரவண சர்மா

*பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: **prohithar@gmail.com** இணையம்: **www.prohithar.com**

www.prohithar.com